பானையிற் போட்டு எட்டுவல்லத் தண்ணீர் விட்டு
ஒரு வல்லமாக்கி வடித்து இதுக்குச் சரியாக
நல்லெண்ணெய் விட்டு பசுவின் பாலும் விட்டுச்
சிறுக்கீரை பொன்னாங்காணி இந்தச் சாறு
வகைக்கு ஒருபடி கூட விட்டுக் காயிற பக்குவத்தில்
கரக்கம் சந்தனம் அதிமதுரம் முந்திரிகைப் பழம்
ஏலாபச்சம் ஆவாரங்கிழங்கு நெய்தற்கிழங்கு
கொட்டிக்கிழங்கு நறுப்பாலிவேர், வாலுளுவை
மயிர் மாணிக்கம், கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய் ஏலம் லவங்கம் பத்திரியல்
42. ஆவரங்கம் கருரோகணி கோரைக்கிழங்கு இது
வகைக்கு வராகனெடை 4 கூட்டிப்பால் விட்டு
அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துத் தேய்ச்சு
முழுக நாலு நாளைக்கொருதரம் முழுகவும்
இதற்குத் தீரும் வியாதி :-

நேத்திர ரோகம், வெள்ளெழுத்து
பித்தபயித்தியம் கண் எரிச்சல் சிலேப்பத் தண்ணீர்
வோட்டம் காசம் கண்ணிற் பட்டது சிரரோகம்
இச் [illegible] தவ மேகசாகை தீரும்.

ஆ தேத்தான் வடகம் பத்தியத்திற் சாப்பாடும்

தேத்தான் விரை நூறு

விரையைத் தண்ணீரில் மூன்று நாள் ஊற வைத்து
மேல்புறணி தள்ளி விரையைக் கல்லில் வைத்துத்
தட்டி இளநீரில் முப்பது நாழிகை ஊற வைத்து
எடுத்துக் கொண்டு அதிலே கூடச் சாதிக்காய்
சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, லவங்கம் சிறு
நாகப்பூ, கொத்துமல்லி, வெட்டிவேர், விலாமிச்சம்
பூலாங்கிழங்கு, கல்நார், இது வகைக்கு விராகனிடை
கி, கோட்டம், ஏலம், நற்சீரகம், சீந்திசர்க்கரை
இது வகைக்குத் துட்டிடை 1, நல்ல சந்தனம், தேவ
தாரம், அகில்கட்டை, செஞ்சந்தனம் வகைக்கு
அ3·அ விராகனிடை 1 கோரோசனம் பணவிடை 3
குங்குமப்பூ பணவிடை 3, கஸ்தூரி பணவிடை 1
சீனாசர்க்கரை பலம் 1 இளநீரில் ஊறின தேத்தான்
விரையது யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அருத்துக்
கல்லில் ஆட்டி தோண்டிக் கொண்டு கிடா
நாளத்தைப்படியும் பசுவின் வெண்ணெய்
சட்டியில் போட்டு நன்றாக யுருகவிட்டு ஆட்டின
மருந்தை வில்லை வில்லையாகப் பாத்து நெய்யிற்க்
கர்ச்சி சிவக்க வேகவிட்டு இறக்கி வைத்துக்
கொண்டு ஒரு வடகத்தை ரெண்டாக பாத்துக்
காலம்பரவும் பாதி சாயந்திரம் பாதி இருவேளை சாப்பிடவும்
இப்படி அந்த ...... பட்டு தின்று வரவும்

தீரும் வியாதி :

பெரும்பாடு தீரும், பளர்ச்சி தீராது ஆ

கபாலகுளை, அஸ்திரவெட்டை அஸ்திசுரம்
எலும்புருக்கி வெட்டை இருமல் உஷ்ணமாந்த
பயித்தியம் நீர்த்தாரை வெள்ளை ரத்தம் சீமூத்திரம்
கருப்பு மூத்திரம் பாண்டு, சிவப்புமாப்படி பல ரோகம் தீரும்

44.அ

சித்திரமூல வடகம் கிரந்தி யரையாப்புக்கு கைகண்ட பாற யோகம்

சித்திரமூலவேர்ப்பட்டை பலம் 1

வெள்வெங்காயம் தோலையெடுத்து, மிளகு, ஏலரிசி, நல்ல
நெல்லரிசி, அருக்ளது இது வகைக்குப் பலம் 4
ஒன்றாய்க் கூட்டி உருந்துக் கல்லிலே நன்றாய் ஆட்டி
இதிலே ஒரு பலம், நல்ல வெல்லம் தட்டிப் போட்டுப்
பிசைந்து நாணிக்காயளவு உருட்டிச் சட்டியால் ஒரு
படி நல்லெண்ணை ஊட்டு உருட்டின மருந்துகளைப்
போட்டுச் சிவக்க வெந்து மருந்து பதத்தில் எடுத்து
வைத்துக் கொண்டு காலம்பற ஒரு வடகம் தின்று
வடகம் வெந்த எண்ணையை ஒரு கரண்டி குடிக்கவும்.
இப்படி ரெண்டு நேரம் 7 நாள் கொள்ளவும். பத்தியம்
பசும் பாலும் சோறும் நெய்யும் ஊட்டுண்ணவும்.
உப்புப் புளி தள்ளவும். துவரைப் பருப்பால் வெள்ளுள்ளி
மிளகு போட்டுக் கடைந்து பசுவின் நெய் ஊட்டு
ஆ உண்ணலாம். சோத்துக்கு உப்புப் புளி காரம் தள்ளவும்
எட்டாநாள் தலை முழுகவும். பிறகு உப்பு வறுத்துக்
கூட்டிக்கவும். இச்சாப் பத்தியமாக குறைச்சல்
வடகத்தையும் எண்ணையும் குடிச்சு முடிந்த உடனே
தீரும் வியாதி :.

கிரந்தி அரையாப்பு புண்ணுக்கு
மாந்தம், வாய்வு, வண்டுகடி, சிரங்கு, சொறி, விஷ
எல்லாந் தீரும்.

45. அ அக்னிமந்தம் சயத்துக்கு சுவாசகாசம்
தாளிசப் பத்திரி வடகம்

தாளிசப்பத்திரி, செவ்வியம், நெல்லிப்பருப்பு, கிராம்பு, ஏலம் சாதிக்காய், லவங்கப் பத்திரி, லவங்கப்பட்டை, சாதிப் பத்திரி வாலமிச்சம் இது வகைக்கு வராகனெடை 2 திப்பிலி வராகனெடை 4 திப்பிலிமூலம் வராகனெடை 4 சுக்கு வராகனெடை 12 கடுக்காய் வராகனெடையும் இடித்து வைத்துக் கொண்டு ஒரு பானையிலே ஆடாதோடை கண்டங்கத்திரி யிதுரெண்டும் பலம் நாலு கொண்டு இடித்து நாலஞ்சு படி தண்ணீர் விட்டு அந்தப் பானைக்கு வெடுகட்டி அதின் மேலே சூரணம் வைத்து மேல்ச் சட்டி ஒன்று மூடி வெந்த பின்னெடுத்துப் பாக்களவு உருண்டை செய்து தேனிலே மூன்று தேக காலம் ஆ கொள்ள வாதம் பித்தம் சிலேற்பனம் அரோசிகம் சுவாசகாசம் சயம் அக்னிமந்தம் சுதாகாசத்து சுரங்கள் குரலிற வாய் வாசனையுண்டாம்

46. அ தீபாக்னி வடகம்

பெருங்காயம், வாய்விளங்கம், செவ்வியம், ஏலம், திப்பிலி, திப்பிலிமூலம், சித்திரமூலம், கடுகுரோகிணி, அரத்தை, நற்சீரகம், கருஞ்சீரகம், திகடை, சிறுதேக்கு, கோட்டம், அக்கராக்காரம் ஓமம் அதிமதுரம், கிராம்பு, லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி தாளிப்பத்திரி சாரணைவேர்

இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு கறியுப்பு எவச்சாரம்
நவச்சாரம் மிளகு சுக்கு வகைக்கு வராகனெடை 1
இஞ்சிச் சாறுவிட்டு அரைத்து சித்திரமூலக் கஷாயம்
விட்டரைத்து இலந்தைக் காயளவு உருண்டை செய்து
அநுப்பானம் தேனிற் கொள்ளவும். பசிதீபனத்துக்கு

ஆ ✓ ஊசவாதத்துக்குக் கிளிமூக்குங் கிழங்கு
சுண்ணம்

வறுத்து அந்தின ஆலக்கொள்ளை

படி-1 இதுக்குக் கல்கம் வெங்காரம் கருஞ்சீரகம்
நற்சீரகம் கடுக்காய் வகைக்கு வராகனெடை 5
கிளிமூக்குச் சைலங்கு பலம் 2, வெள்ளருகு பலம் 2
குப்பைமேனியான் பலம் 2 பூண்டுவெங்காயம் பலம் 2
இதுவெல்லாம் அரைத்து கரைத்துப் பதத்தில் அருத்து
எட்டுநாள்க் கொள்ள ஊசவாதம் தீரும்

47-அ மகாபஞ்சாக்னிச் சூரணம்.

சுக்கு, மிளகு, திப்பிலி

பெருங்காயம் செவ்வாயம் வாய்விளங்கம் சிறுதேக்கு
அதிமதுரம் கடுகு ஓமம் மலைதாங்கி நற்சீரகம்
கருஞ்சீரகம் திப்பிலிமூலம் சித்திரமூலம்
இந்துப்பு எவச்சாரம் வகைக்கு வராகனெடை 2
இளவறுப்பாக வறுத்து இடித்து வஸ்திரப் புடமிட்டு
தெருகழற் சாறமான்றுங் கொள்ள தீரும்

தீரும் வியாதி :

அக்கினிமந்தம் அரோசிகம் உப்பிசம் வயிற்றுவலி வாந்தி பொருமல் சகலவாய்வு அறுபட்டுப் போகும்

ஆ

தாளீசசூரணம்

தாளீசப்பத்திரி, நாககேசரம், கற்கடகசிங்கி, சிறுதிப்பிலி, நல்லதிப்பிலி, தேசாவரம், லவங்கம், லவங்கப்பத்திரி லவங்கப்பட்டை அதிமதுரம் இதுவகைக்கு வராகனெடை 2, தான்றி, நெல்லி, கடுக்காய், வாய்விளங்கம், சுக்கு மிளகு ஏலம் கோட்டம் குந்திரிகப் பதம் பெருஞ்சீ வகைக்கு வராகனெடை 4 இது வெல்லாம் பொடித்துச் சூரணஞ்செய்து இதுக்குச் சம சர்க்கரை கூட்டித் தின்னவும்.

தீரும் வியாதி :

வாய்வு, அக்கினிமந்தம், சூலவாய்வு, மூலவியாதி, புடம்பத்திரவு, மேகம், கிரப்புருசு, பயித்திய குன்மம், பயித்திய விகாரம், அண்ட வாய்வு உடம்பெரிப்பு, தொண்டைத்தினவு உள்ருரணம், இதுகள் எல்லாம் சேற்றுமத்தால் வந்த வியாதிகள் நெய்யால்க் கொள்ளத் தீரும்.

48-அ

நித்திரை வரும்படிக்கு மருந்து

கட்டப்புல்லாமணியைச் சாறுபிழி வாட்டரைத்து பாக்களத் தடவா வெற்றிலையால் சுண்ணாம்பு கூட்டித் தின்னக் குடுக்க நித்திரை வரும்.

ஆ சர்வவாயுவுக்கு சூரணம் வயறுவப்புசமது நீக்கும்.

சுக்கு மிளகு வராகன்-௪-,
திப்பிலி வராகன் ௩, தேசாவரம் வராகன் ௩, ஏலம் வராகன் ௨ சாதிக்காய் வராகன் 1, சாதிப்பத்திரி வராகன் ௧, லவங்கம் வராகன், ௩, லவங்கப்பத்திரி வராகன் ௧, இந்துப்பு வராகன்-௧௩, மிளகரணை வேர் வராகன் ௩, நீக்கொளிஞ்சி வேர்ப்பட்டை ஆதளை வேர் செருப்படி சமூலம் கையாந்தகரை சமூலம் ஆடாதொடை வேர் குப்பமேனி வேர் நெல்லிச் சாரணை வேர் வகைக்கு வராகனெடை 1 இது எல்லாம் சூரணமாய் இடித்து ராத்திரி பகல் தேன் வெந்நீரில் கொள்ளச் சகல வாய்வு பேதம் வயறூதலுந் தீரும். வயறு பேதியாகும்.

44·அ சிவதைச் சூரணம் சகல வாய்வுக்கும் பேதிக்கும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, தான்றி நெல்லி, கடுக்காய், ஏலம் வாய்விளங்கம் சுந்தக்காய் லவங்கப்பட்டை லவங்கம் இது எல்லாம் சமன் கூட்டி இடித்துச் சூரணம் ஒரு பங்கும் சிவதைச் சூரணம் மூன்று பங்கும் கூட்டி ரெண்டு சூரணமும் கலந்து வெந்நீரில் வெருகடிப் பிரமாணம் கொள்ள சகலபேதியாம் வாய்வு அறுசாந்து பெருக்குச் சக்கரையால் கொள்ள சகல வாய்வு அறப்பட்டுப் போகும்.

44

ஆ மேகம் 21. முந்திரிகைச் சூரணம்

முந்திரிகைப்பழம், பேரிச்சன் பழம், ஏலம், தக்கோலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கப் பத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை, அதிமதுரம், சந்தனம், ரைந்திந்தகரம், கொத்துமல்லி, கோரைக் கிழங்கு, நெல்லிவத்தல் நாககேசரம் நெல்லம்பொரி, அல்லிக் கிழங்கு நவட்ச்சீரகம் குருவேர் சுகந்தபாலைவேர் இதுவெல்லாம் சமன் கூட்டி யிடித்து சூரணத்துச் சரி சக்கரை கூட்டி வென்னீர் பசுப்பாலில் கொள்ள பாண்டு சயம் குன்மம் காமாலை 21 மேகமும் தீரும்.

நூ:அ ஏலாதிச் சூரணம் மேகத்துக்கு

ஏலம், சிறுநாகப்பூ, தாமரைக் கிழங்கு, சந்தனம் லவங்கம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, தாளிசப் பத்திரி, சாதிப் பத்திரி, சாதிக்காய், சூலாங் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிராம் கிழங்கு, கொத்தமல்லி, சடாமஞ்சி, தேவதாரம், அகிலக் கட்டை, ரத்தச் சந்தனம், வெட்டிவேர், வாலபச்சம், கோட்டம், அதிமதுரம் பச்சிலை முத்தக்காசு தகரைவேர் சாரணைவேர் சீந்திக்கொடி, பறங்கிப்பட்டை முந்திரிகைபழம் பேரிச்சம்பழம் உளகறு

கறப்பூரம், சுக்கு மிளகு, திப்பிலி, ஆனைத்திப்பிலி
கருஞ்சீரகம், கடுகுரோகிணி, அரத்தை, வால்மிளகு
நற்சீரகம், வகைக்கு வராகனெடை 3 கூட்டி
பொடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு
சர்க்கரையால் நெய்யால் வெருகடிப் பிரமாணம்
கொள்ளவும்.

ஆ தீரும் வியாதி:

இருமல், வாய்வு மிகுதியிருந்தால்
தேனில் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி
சேற்றுமம், பித்தம் பாண்டு அரோசி சயம் பிர
மேகம் உஷ்ணம் விக்கல் காமாலை வெகுமூத்திரம்
உம்பாதம் பிள்ளை இருமல் குளை ரத்தபித்தம்
நெஞ்சுநோவுகள் அஸ்திச்சுரம் வாந்தி இது
எல்லாம் தீரும்.

51. அ தீராத பிரமியத்துக்கு பச்சைவெட்டை
வெண்ணெய்

பச்சைவெட்டு வராகனெடை 1,
கலப்பூர சிலாசத்து வராகனெடை 4, கல்நார் வராகனெடை 4
இந்த மூன்றும் கூட்டிப் பொடித்து நாரத்தங்காயளவு
பசுவின் வெண்ணெயால் நன்றாய்க் கலந்து அரைத்து
ரெண்டுபடி தண்ணீர்ப் போட்டுக் கொண்டு ரெண்டு
வேளையும் முள்ளிக்காயளவு சாப்பிட வெள்ளை தீரும்.

பெரும்பாட்டுக்கு

பசுவின்பால் பச்சைப்பயறு,

இதில் பசுவின் நெய் ஒரு சேரை விட்டுக் கலக்கி உதயத்தில் குடிக்கவும் இப்படி மூன்று நாள்க குடிக்கப் பெரும்பாடு தீரும்.

ஆ

வங்கசெந்தூரம்

காரியம் பலம் 1 மேனிக்
காய்ச்சத் தோய்க்கச் சுத்தியாம் இப்படி எழுதரம் உருக்கச் சாய்க்கச் சுத்தியாம் வங்கத்தை சட்டியல் போட்டு வெடியுப்புப் போட்டு வறுக்கப் பறப்பமாம் பின்பு அரசன்பட்டை ஆவரம்பட்டை சென்னாயுருவி சமூலம் இது எல்லாம் ஒன்றாய்க் கூட்டி யாந்துத் தூளப் பண்ணி அந்தப் பற்பத்துப் போட்டு நாயுருவிக் கோல் கொண்டு வறுக்கவும் கை விடாமல் பொடித் தூளா தூளா வறுக்கவும். கோரோசனை நிறமாம். மறுநாள் வறுக்க சிவந்த செந்தூரமாகும். மூன்று நாள் வறுக்க சிவந்த செந்தூரமாம் நாலா நாள் வறுக்க சாதிலிங்க நிறமாம் அஞ்சா நாள் கற்றாளை வேர் நறுக்கிப்
52அ போட்டு கற்றாளைக் கோல் கொண்டு வறுக்க முருக்கம்பூச் செந்தூரம் செந்தூரம் செய்கிற போது ஆவரை விறகு கொண்டு எரிக்கவும் இப்படிச் செந்தூரமாய்ப் பாகமானால் எடுத்துப் பரணியிலே வைத்துக் கொண்டு இதுக்கு அனுப்பானம் ஆவரை விராகனெடை 15 நீர்ப் பூலாவேர்ப்பட்டை விராகனெடை 25 கொத்த மல்லி விரை விராகனெடை 10 இது எல்லாம் ஒன்ற

பிழுத்து அந்திக்காய் இரண்டுபிடி காய் நட்டி
ஒரு வள்ளத் தண்ணீரோட்டுக் கஷாயமாக வைத்து
கொண்டு உபிடி தண்ணியாகக் காச்சி அந்தத்
தண்ணீரோட்டு சூரண மருந்தை நசுக்குபட அரைத்து
நெல்லிக்காயளவு உருட்டி நிழலிலே உலர்த்திக்
கொண்டு ஒரு உருண்டை எருமை மோரோட்டு
அரைத்து அதில்ப் பின்னும் மோரோட்டுக் கலக்கி
அதில் அரைப் பணவிடை வங்க செந்தூரம் கூட்டி
ஆ ரெண்டு நேரமும் கொள்ள யிப்படிப் பன்னிரண்டு
நாள் கொள்ள வெகுசலம் நீர்ப்பிழிவு எரும்பு மொய்க்
கிறது மூத்திரத்தை இருபத்தொரு வகை நீரிழிவுகளும்
குணமாகும். யிதுக்குப் பத்தியம் அவன் சாப்பிடுகிற
மட்டுக்கும் சோறுயாசி எவ்வளவுவோ அதுக்கு
தக்கின தண்ணி உலைவைத்து அதில் நாலஞ்சு
அதுளங்காய்த் தட்டிப்போட்டு உலைகாஞ்சதின
பிறகு அந்தக் காயை எடுத்துக் கொண்டு சோறு
யாசி போட்டு வெந்தும் சிக்கிற பக்குவத்தில் அந்த
அதுளகாய் ...... கூடப் போட்டு மசிச்சு அந்தச்
சோறும் நல்லெண்ணெயும் நல்லெண்ணெயோட்டு
விறுத்த இளசான அவரைப் பிஞ்சும் கூட்டித் தின்னவும்
53 அ இப்படி மூன்று நாள்ச் சாப்பிட்டால் மூன்று
வருசத்துக்கு நாலுநாள்ச் சாப்பிடவும். நாலு
வருசத்துக்கு பன்னிரண்டு நாள் சாப்பிடவும்
பன்னிரண்டு வருசத்துக்கு ரோகமில்லை வெகு
சலத்துக்கு ஆவரை பஞ்சு வகை பலம் 1 எருமை
மோர் சட்டியில் ஊறத்து பிட்டுக் கட்டி வைத்து
பிறகு அந்த மோர் ஊறத்தரைத்து தேற்றான்
ஊரையளவு உருண்டை செய்து நிழலிலேயுலர்த்தி
அதிலே ஒரு உருண்டையும் ஒரு பணவிடை

செந்தூரமும் எருமைத் தயிரிலே குழைத்துக் கொள்ள
-வும். சகல கசிச்சலும் நீக்கும். சகல கருப்பு மோர்
போலே ஆகிறதுக்கும் ஆவாரைக் கொழுந்து ஒரு
ஆ பிடி எருமை மோரால் பட்டவாயல் எடுத்து அரைத்து
அது சிந்தின காயலவும் பணவிடை செந்தூரமும்
கூட்டி எருமைத் தயிர்க் கூட்டிக் குடிப்பாக்
கொடுக்கவும் நீர்அடைத்துச் சிறுக ஆகுகிறதும்
அதுக்கு அனுப்பானம் கரும்பின் சாற்றில் பண
இடை செந்தூரம் சேர்த்துக் கொடுக்கவும்.
தாகமில்லாமல் சலம் இறங்கினால் ஆவாரையை
பொடி பாக்களவும் பணவிடை செந்தூரமும்
எருமைத் தயிரில் குடிக்கவும் தீரும். சலம் இறங்கிற
போது எரிப்பாக்கிறதும். ஈ மொய்க்கிறதும். நாய்
நக்கிறதும் நெய் மிதக்கிறதும். இப்படிப் பலவிதமாக
கண்டால் அதுக்குக் கஷாயங்களும் அனுப்பான
விசேங்களும் குடிக்கலாம். வெள்ளாட்டுக் கொழுப்பில்
பணவிடை கூட்டி செந்தூரம் குடித்தால் நீக்கும்
சீ்ச தேத்தான் விரை கடுக்காய்ப் பொடி ஆவாரை விரை ஊறத்
பொடி வாலம்பரின் இது எல்லாம் வகைக்குப் பலம்
கூட்டிப் பொடி செய்து இதில் விராகனிடை தானும்
எருமை மோரில் ஆவாரைக் கொழுந்து பட்டவாத்து
ஆ அரைத்து சிந்தின காயலவும் பணவிடை செந்தூரமும்
எருமைத் தயிரிலே குடிக்கவும். இப்படி மூன்று நாள்க்
கொள்ள தீர்க்கும். நாளப்பட்ட வியாதியானால் ஒரு
மண்டலம் கொள்ளவும். பத்தியம் வாழைக்கச்சலும்
அதனுடகூடவும் அத்திப்பிஞ்சு முசுட்டையான
பின்னாக்கு ஆவாரங்கொழுந்து கோடைகவுதான
உப்பு எருமை மோர் கூட்டவும் தண்ணீர்விட்டு
சமைக்கவும். போகம் விடவும். கைகண்டது.

ஆ சாறுகள் பாயக்குறு பற்பம்

உயர்க்களிஞ்சி 20, 30 கொண்டு வந்து சாதிக்கல்லுப்பு ஒருபடி சட்டியில் போட்டு இந்த அப்பு களிஞ்சியும் கூட வறுக்க வறுக்கப் பற்பம் ஆகும். அந்தப் பற்பம் பணவிடை கல்லாப்பாலுக்குப் போடத் தண்ணீராகும் அயமான சாறுவார்த்தனைக்கும் போடச் சாறு வரும். இதுக் கண்டது. சாறு வாராத்தனைக்கெல்லாம் சுற்றுப் போட்டு அமர்த்தனையைப் பாலைய தண்ணீர் சாறு வரும். குளத்தில் இருக்கிற நீலமான சுண்ணாம்பு அகறைக் களிஞ்சி என்றாலும் அதை எடுத்து அவ்விதம் மேல்க் கண்ட அப்பட்டு வறுக்கவும். கைகண்டது.

55-அ பேய்க்குமட்டி வாய்வு - 18

பேய்க்குமட்டிக்காய் ஒன்றைப் பதினாறு துண்டமாக நறுக்கி இதில்க்கூட்டு மருந்துகள் வெள்வெங்காயம் பதினாறு கட்டி உடைத்து தொலித்து இதுக் கூட கடுகு அக்கு இந்துப்புச் சவுக்காரம் காந்தம் வகைக்குக் கழஞ்சு கட்டி சாரணைக் கிழங்கு பலம் 4 குப்பைமேனிச் சாறு உழக்கு நொச்சிச் சாறு கீழா நெல்லிச் சாறு ஆடு தின்னாப்பாலைச் சாறு புங்கம் பட்டைச் சாறு வகைக்கு உழக்குப் பசுந்து பாகு அழாக்கு கள்ளிப்பால் ஆழாக்கு சிவனார் வேம்பு கழஞ்சி சூருக்கப்பட்டை உழக்கு இதுவெல்லாம் ஒன்றாய் சேர்த்து ஒரு மண்டலம் ஊரவிட்டு அரைத்து

50

யானைத்தக் கொட்டை மாமானம் உருண்டை குளிகை
செய்து தினசரி சாப்பிடவும்.

அ௩ தீரும் வியாதி :

குடல்வாய்வு குடல்புரட்டுவாய்வு
கிண்டலவாய்வு ஆனந்தவாய்வு குன்மம் வாய்வு
சந்திகுன்மம் வாய்வு ரத்தமூலம் மூலவாய்வு பித்த
வாய்வு வாரணவாய்வு தால்வாய்வு தாக்கையவாய்வு
வாதவாய்வு முடக்குவாய்வு சந்துவாய்வு ஆகாச
வாய்வு சூரவாய்வு கல்வாய்வு இப்படிப் பலபல
வாய்வும் தீரும். மூன்று நாளைக்கு மூன்று
உருண்டை களநிலைக் கொடுக்கவும். பத்தியம்
பால், முருங்கையிலை காய் உட்டவும். கறப்பான்
மீன தவிர்க்கவும். 18 வாய்வும் தீரும்.

கூ.அ வல்லாரைநெய் - சயம் இன்பத்துக்கு

வல்லாரை சமூலம் இடித்துச் சாறு
படி 4, சீந்தில் செங்கழுநீர்ச் சாறு சமூலம் படி1,
நல்ல களப்பாலைச் சாறு படி1 பசுவின் பால்படி1
செவ்வாழை நீர்த் தண்ணீர்படி1 பசுவின் நெய்படி1
இதுவெல்லாம் ஒன்றாய் ஒரு தாழியிலே விட்டு
கோஷ்டம் அதிமதுரம் கோரோசனை நல்ல
கற்பூரம் வகைக்குக் கழஞ்சு 4 செங்கழுநீர்க்
கிழங்கு அதையாலக்கப் பேர் நிலத்தனை
இலவங்கப்பூ வகைக்கு வராகனெடை நாலே முக்கால்
உட்பட மேல் மருந்து இதுவெல்லாம் ஒன்றாய்ப்
பசுவின் பால்விட்டு அந்த நெய்யால் சாறுடன்
உடன் கரைத்து அடுப்பில் வைத்து 3 நாள்

அரும்பால் சிறுதீப்பட வைத்து இருந்து நாலாநாள் எடுத்துக் காச்சா வைத்துக் கொண்டு கழுஞ்சிநெய் கொண்டு வர தீரும்.

ஆ தீரும் ஆயாது :

ஒன்பதுவகைச் சயமும் கைகாலு உடம்பெரிவு வயற்றெரிவு வாய் நாக்கு நெஞ்சு -லந்து பொறுக்கும் இருமல் இளைப்பு காசம் காச்சல் இளை இளைப்பு மருந்திடு உடனே தின்ற நஞ்சு நாபி எருக்கன்பால் அலரிக்கூறை வண்டு எட்டிவேர் இப்படித் தின்ற நஞ்சுகளும் எலும்புருக்கி மேகம் யானைத்தடம்பு பருக்கும்.

அக்கலாக்காரம், சுத்தராப் படிகம், அரிதாரம் லவங்கம் லவங்கப்பட்டை சாதிக்காய் தாளிசப்பத்திரி இது வெல்லாம் சமன் கூட்டி சுரத்தாவடி வெதுப்பாச் சாறு பிழிந்து இந்தச் சாறு விட்டரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சூலைப் பாலாயும் துளசிச் சாற்றிலேயும் சுரை யிலைச் சாற்றிலும் யாதுவகையொன்றில் ஒரு குளிகை அரைத்து நாலாந்தடவை வெள்ளியும் சோறும் அண்ணத் தோசமெல்லாம் தீரும்.

ஒரு எலுமிச்சம் பழத்தை
கோகலம் அறுத்துச் சாறு பிழிந்து போட்டு அது

52

நிறையச் சீரகம் சொப்பு சிலைமண் காயாக்கிச்
செய்து ஆவரை வேரகள்ச் சுட்டுச் சிலைமண்
கருகின உடனே எடுத்துச் சிலையை எடுத்துப்
போட்டு அம்மியாலே நன்றாயரைத்துச் சிறு
சுண்டை காயளவு குளிகை செய்து நிழலில்
உலர்த்தி ஒரு குளிகை முலைப் பாலாலே அரைத்து
நாக்கிலே தடவச் சகல தோசம் சுரம் தீரும்

உதையமார்த்தாண்டன் குளிகை
சர்வ சுரத்துக்கு நிச்சயமான உத்தை

௫௮

சித்திரமூலவேர், மலை
தாங்கிவேர், நெல்லிவத்தல் கோட்டம் இந்துப்பு
இது சமன் கூட்டி வெள்ளாட்டு மூத்திரம் விட்டு
சாமம் அரைத்து சிறிய தூதுவளங்காயளவு
உருட்டி நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு
குளிர் சுரத்துக்கு துளசி கசாயத்திலே மூன்று
நேரம் கொட நிறக்கும். தாபச் சுரத்துக்குச் சாரைத்
தண்டு அல்லி வேர் கோரைக்கிழங்கு சுக்கு
கூட்டி இடித்து கசாயமிட்டுக் குடுக்கத் தீரும்
ஆ பித்தவெட்டை மேகசுரத்துக்கு மொசுமொசுக்கை
இடித்துப் பசுஞ் சாறு பிழிந்து உறைத்த மணலாட்டு
கறந்த நெய்யாலே ஒரு குளிகை அரைத்துக் குடுக்கவும்.
இப்படி மூன்று குளிகை குடுக்கத் தீரும் சீத சுரத்துக்கு
திரிகடுகு கசாயத்திலே குடுக்கவும் சன்னிவாத
சுரத்துக்கு முருங்கைப் பட்டை நிலவேறு பொறும்பா
வேர் கண்டங்கத்திரி கோரைக்கிழங்கு அரத்தை
தேசாவரம் கருஞ்சீரகம் வெள்ளுள்ளி இந்த கசாயத்தில்
குடுக்க சர்வ தோசம் சன்னி தோசம் எல்லாம் தீரும்

அரதோஷ குளிகை

59அ

அகத்திப்பட்டை, சுத்திவேர்,
எலியாமணக்கின்வேர், நுருவிளைவேர், சிறுக்கீரை
வேர், பொன்னாங்காணிவேர், கையாந்தகரைவேர்,
பொடுதலைவேர் ஆடாதொடைவேர் சிறுகுளைவேர்
வெட்டிவேர் விலாமிச்சம்வேர் வில்லைப்பழத்தனு
சந்தனம் ருத்திராட்சம் இது வகைக்கு வராகனிடை
1, கோரோசனம் சுக்கு, திப்பிலி, அதிமதுரம், அக்கிராக்
காரம், கோட்டம், சமுத்திராப்பழம், சுந்திராப்பழம்,
பேரீச்சம்பழம், நஞ்சுண்டாம்பழம், கூச்சைப்பழம்,
கற்கண்டு, சர்க்கரை, லவங்கம், லவங்கப்பட்டை,
ஏலம் வகைக்கு வராகனிடை 2 வெங்காரம்,
சலங்கொம்பு, சீரகம், முத்துப்பவழம், பொன்
வெள்ளி, வகைக்கு வராகனிடை 4 பச்சைக்
கற்பூரம் பணவிடை 2 இது யெல்லாம் இளநீர்
விட்டு அரைத்துக் குன்றியளவு உருட்டி நிழலிலே
உலர்த்தி வைத்துக் கொண்டு அனுப்பானங்களிலே
கொடுக்க சர்வ தோஷமுந் தீரும்.

தோஷத்துக்கு குடிநீர்

ஆ

வில்லைவேர், கொத்தமல்லி, நெல்ப்
பொரி ஆடாதொடைவேர்ப்பட்டை கிராம்பு யாது
சமமாய்க் கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

-3

54

60-அ

~~தொண்டைக்கு ஜயாத்துக்கு குளிகை மருந்து~~

60-அ சகல தோஷத்துக்கு மை செய்ய விபரம்

பச்சைநாபி, நாவிஷாசம் நேர்
வாலம், நெல்லிக்காய்க் கெந்தகம் இது சமன் சுட்டு
பன்றிரத்தம் பாம்பு நஞ்சு வகைக்கு விராகனிடை 1
கூட்டி பனங்கருப்பட்டி விராகனிடை 2 கூட்டித்
தேங்காய்ப் பால் விட்டரைத்துப் பரணியில் அடைத்து
வைத்துக் கொண்டு சர்வ சன்னி தோசம் விசம்
நஞ்சு தின்றவர் பாம்பு கடிப்பட்ட பேர்களுக்கு நாவில்
தடவத் தீரும்

ஆ தோஷ குளிகை

ஆ அக்கிராக்காரம் அதிமதுரம்
லவங்கம் லவங்கப்பட்டை சாதிக்காய் தாளிசப்
பத்திரி சுக்குந்திராப்பழம் இது சமன் கூட்டி சாரத்தால்
சாறுவிட்டு அரைத்துக் கடலைப் பிரமாணம் குளிகை
செய்து வைத்துக் கொண்டு முலைப்பாலிலாவது துளசி
சாற்றிலாவது கொள்ள தோசம் விசம் தீரும்.
பத்தியம் வென்னீரும் சாதம் சாப்பிடவும்.

61-அ காரணி வர்த்தி அஞ்சன வர்த்திக் குளிகை

61-அ ஆதித்த வாரத்துக்கு முருகு
அமர்ந்து உலர்த்தி வைத்துக் கொண்டு சுக்கு மிளகு
பெருங்காயம் திப்பிலி வெள்ளுள்ளி கருப்பட்டி இது
~~சமன் கூட்டி வெயிலில் பொடித்து சாற்றில்~~

சமன்கூட்டிப் பொடித்து இந்தப் பொடிக்குச் சமன் நீருள்ளி மாங்கிசங் கூட்டி எலும்பிச்சன் சாற்றில் ஒரு சாமமரைத்து சிந்திச்சாறு குப்பைமேனிச் சாறு தும்பைச்சாறு துளசிச்சாறு வேளைச்சாறு நொச்சிச்சாறு யிதுகளாலே வெவ்வொரு சாமம ரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு வெற்றிலைச்சாறு எலும்பிச்சன்பழச் சாறுகளால் கண்ணில் அஞ்சனமிட நஞ்சுதின்றவர்கள் தண்ணியால் செத்தவர்கள் வாசந்தின்றவர்கள் யாவர்க்கும் பேய்க்கும் இந்த வாதத்திலே மயங்கிப் பிரக்கினையற்றுக் கிடக்கிறபேர்களுக்கு அஞ்சன மிட எழுந்திருப்பார்கள் கைகண்டது.

ஆ

நாசியாவுத

ஆ

நீம்பலப்பூச்சி கிளைப்பூட்டு பூவும் யிது ரெண்டும் பொடிச்சுக் குடிலலே அடைத்து ஒரு பணவிடை பொடி நாசியால் உத்தப் பாம்பு வசம் நஞ்சுதின்றது தண்ணியால் வாசுந்து மயங்கினதுகள் இதுக்குத் தீரும்.

62.அ ✓ அறுவகை ஜெந்துக்கு சூரணம்

62.அ

ஆயம்பிரண்டை வேர்

நல்ல பிரண்டைவேர் காட்டுக்கிரணைவேர் கலிக்கிரணை வேர், பெருமரப்பட்டை அதிவிடையம் அதிமதுரம் கோட்டம் நச்சிரகம் சுக்குத் திப்பிலி சாதிக்காய்

சாதிப்பத்திரி வகைக்கு வராகனெடை உ சுத்தி செய்து கெந்தகம் வராகனெடை 12, நெல்லிவற்றல் வராகனெடை 12 இதுவெல்லாம் உட்டுச் சூரணம் செய்து தேன் நெய் சக்கரை யிந்த அநுப்பானத்தில் மண்டலங் கொள்ள ஆறுவகை மேகமும் பட்டுப் போகும் கைகண்டது.

ஆ

சர்வஉஷ்ணகுன்மத்துக்குச் சூரணம்

ஆ

அளிஞ்சிப்பட்டை நாவல்ப் பட்டை முருங்கைப்பட்டை புளியம் வேர்ப்பட்டை துஞ்சிலைய வேர்ப்பட்டை சித்திரமூலவேர்ப் பட்டை கொன்றைவேர்ப் பட்டை கல்லுப்பு திப்பிலி சுக்கு மிளகு கடுக்காய் நெல்லிக்காய் இதுகள் சமன் ஒட்டி யிடித்துச் சூரணம் பண்ணி கோமூத்திரத்தில் மத்திச்சு ஒட்டில் வறுத்து வைகுகரப்பிரமாணம் கொள்ளவும். இஞ்சிச் சாற்றில்க் கொள்ளக் கிரைச் சூலை வாதம் சூலை சகல குன்மமுந் தீரும்.

௬௩-அ

கண்ணில் 96 வியாதிக்கு சிமல மருந்து

௬௩-அ

பசுவின் வெண்ணை ஒரு கிடா நார்த்தம்பழம் அளவு கொண்டு வந்து ஒரு எலுமிச்சம்பழம் கனிஞ்ச பழத்தை வெண்ணையில் பொதிந்து அதுக்கு நிறைய வெள்ளாட்டுக்கோமியம் ஒரு பாண்டத்தில் விட்டு 30 நாளதினை யிறுக்க விட்டு வெண்ணையை எடுத்து அது சட்டியில்

தண்ணீர்விட்டு ராத்திரி முப்பது நாழிகை யூறக்க
விட்டு வெள்ளையை யெடுத்து உள்ளே இருக்கிற
பருத்தை எடுத்துப் போட்டு மறுபடியும் அந்த
வெள்ளையிலே பொதிந்து முன் போலே கோமயத்தில்
~~ஆ~~ ஊறவைத்துப் போடவும். இப்படி ராத்திரி பகல்
60 நாழிகைக்கு 30 நாழிகை வெள்ளாட்டு
மூத்திரத்திலும் 30 நாழிகைப் பசுச்சாணித் தண்ணீ-
ரிலும் யூறக்க எடுத்து இப்படி 48 நாளைக்கும்
ஆ ராத்திரிப் பகல் இவ்விதம் செய்து வந்த பிறகும் 48ம்
தினசரி வைத்த பருக்களை அன்றாடகம் அறுத்து
தோய்ப்போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும்.
வெள்ளையைச் செம்புச் சிமிழிலே அடைத்து மூடிப்
பூமியிலே 12 நாள் புதைத்து எடுத்துப் பார்க்க
அந்த வெள்ளை இலைகளைப் பச்சை போலே
இருக்கும். இந்த மையை எல்லாதுவு மெடுத்து
~~அவைக்கொண்ணை~~ உலக்கிலே காய்ச்சிக் கண்ணிட
கண்ணிலுள்ள வியாதி சகலமும் தீரும். இதுகைகண்ட
பரீட்சை இதின் பேர் நயன சஞ்சீவி மையென்று
பேர் யிந்த மையடைக்கிறது செம்புச்சிமிழை செய்கிறவிபரம்
ரெண்டு பலச் செம்பை யுருக்கி மோரும் ஆட்டு
மூத்திரம் கலந்து அதில் சுத்திரம் உருக்கிச் சாய்த்த
செம்பால் பிறையில் வெள்ளையை வைத்துப்
பூமியில் பன்னிரண்டும் நாள் புதைத்து எடுத்து
வைத்துக் கொண்டு கண்ணுக்கு மை போடுவது.

கைகண்டது.

/

58

64அ

இளையாருமலுக்கு சூரணம்

64.அ

எலியாமணக்குவுடையாள்

போதக் கொண்டுவந்து பசுவான் பாலிலாவது குடிந்த
தண்ணீரிலாவது வேகவைத்து எடுத்து உலர்த்தி
வஸ்திரக் காயம் செய்து கொண்டு வெருகறப்
பிரமாணம் எடுத்து ஒரு பிடி பசுவான் பாலின்ப்
போட்டுச் சுண்டக் காச்சிக் குடிக்க நெஞ்சிலுள்ள
கோளைதனை யெடுக்கும் அதின் பிறகு கோளி
பிலகு நீராவது வெள்ளைச் சாரணை மிலகு நீராவது
உப்பில்லாமல் குடித்துப் பின்பு இந்த மிளகு நீரும்
சோறும் அன்ன இப்படி ரெண்டு தினம் செய்து
ஆ குடிக்க நெஞ்சிலுள்ள கோளையை வோறுத்துப்
போம். மூன்றாவது குடிக்கும் போது கோளையெடாமல்
இருந்தால் அந்த மட்டுடனே மருந்து நிறுத்தவும்.
கோளை யெடுத்தால் பின்னும் ஒருதரம் குடிக்கவும்
இதற்கு யானையாருமல் மந்தாரகாசம் உதிமாந்தை
உட்டு ராப்புகுதி நெஞ்சிலெச்சி புளாள் நாத்தம்
நெஞ்சு நோவு யாதுகளும் தீரும் இந்தச் சூரணம்
பாலிலே காச்சிக் குடிக்க கூட்டோ ராப்புகுதி
ராகுந்து குணபாடம் - எலிகடி மேல் வந்த யாருமல்
தீரும்.

65அ

சர்வ மூலஞ் சிறாணிக்கி

65.அ

புளியம் பிறண்டைக் கிழங்கு
கொண்டுவந்து சில்லை சில்லையாக நறுக்கி உலர்த்தி

கருங்குறுவை நெல்லரிசி பச்சையரிசி ஒரு படி
நனைச்சு அந்த அரிசியாலே முன்னறுக்கை
கிழங்கு வத்தலதில் எடுத்துண்டு உல்லலையக்
கூடப் போட்டு இடித்துத் தெள்ளி அந்த மாவைக்
களிக்களி நல்லெண்ணை வார்த்து அதில்
வெல்லமாவது சர்க்கரையாவது கூட்டித்தின்னவும்
இப்படி ௫ நாள் தின்னச் சர்வகிராணி கடுப்பு
மூலம் இதுவெல்லாம் தீரும். கை கண்டது. இந்தக்
களி தின்னும் போது உடனே நல்ல முருங்கை மரத்
தளையால் உரலின் மேலே மருந்து கொண்டு
உரலுக்குள் இடித்த சாறெண்ணையைப் போட்டு
ஆ செங்கல்லுக் காயவைத்து உரலுக்குள்ளே போட்டு
செங்கல் மேலே மேகு தெளிக்கப் புகை
யெழும்பும் அந்தப் புகையை ஆசனத்துக் காட்டி
மரத்தளையாலே அந்தக் களியை தின்னவும்.
இப்படிச் சாப்பிடச் சர்வகிராணி மூலங்கடுப்புந்
தீரும். இது கை கண்ட மருந்து.

66-அ
66-அ

✓ ஆறுவகை மூலத்துக்கு மருந்து.

ஆ

கடுக்காய் பலம் ௫, திப்பிலி
மூலம் பலம் ௨, செவ்வியம் பலம் ௨ சென்கொட்டை
பலம் ௩, இதுவெல்லாம் வறுத்துச் சூரணம் செய்து
கருணைக் கிழங்குத் தூள் ௮ பலம் கூட்டி நல்ல
வெல்லம் பலம் நாலு பாகு செய்து அந்தச் சூரணத்
-தைப் போட்டு பிசைந்து நெல்லிக்காய் அளவு
உருட்டி வைத்துக் கொண்டு காலமே ஒரு உருண்டை
தின்று ½ படி மோர் குடிக்கக் கிராணி மூலம் தீரும்

ஆ கரும்பு புண்ணுக்குப் போட மருந்து

துத்தம், துருசு கல்நார்

மிருதாரசிங்கி கடுக்காய் சுட்ட பொடி மனிதன் தலை மண்டைப் பொடி சுட்ட கொட்டைப் பாக்கு போட்டு கலத்திலே பாண்டு மரத்தில் செய்து கொண்டு தேய்த்து கரும்பாக்கு புண்ணுகளுக்குப் போட ஆறாத புண் எல்லாம் ஆறும். சீக்கிரத்தில் புண் தீரும்.

சிறுவ புண்ணுக்குக் களிம்பு

67அ

சாதிலிங்கம், இரசம்,

சாலியம் ஒன்றும் சமன் கொண்டு பச்சை வெட்டுப் பொடி முன் மருந்துக்கும் ரெண்டு பங்கும் இட்டவும் நெடுக்கு முள்ளிக் காயளவு ஆளைக் கரண்டியால் நல்லெண்ணெய் ஊட்டு மெழுகை அதில் போட்டு உருகினபின்பு எடுத்து முன் சொன்ன சாதலிங்கம் சாலியம் வெள்ளைக் குங்கிலியம் யாதுவெல்லாம் பொடி செய்ததை மெழுகு உருகினதுக் கூடப் போட்டு நாயன பலரும் எடுத்துவைப்ப பச்சும் புளியங் குச்சியால் வைச்சுச் சுட்டு பொடித்து பொன்னாங்காணி சுட்ட சாம்பலும் முன் மருந்துடன்
67.ஆ சேர்த்து கலந்து மருந்துக்குப் போட்டு குழைத்துத் தண்ணீர் ஊட்டுத் தேய்ச்சுத் துணியை எடுத்து சிறுமாள் தொல்காய்
2 தொட்டுள் வழிக்க வைத்துக் கொண்டு தினம்

வெற்றிலை உள்ளும் பகுப்பால் இதுகாலையே தடவாய்
புண்ணிலப் போடக் குணமாம் எட்டுநாள் பத்து
நாள்ப் போட எந்த புண்ணும் குணமாகும்

68·அ வெட்டை மாந்த சுரத்துக்கு குடிநீர்:

கொத்தமல்லி, சுக்கு நிலவேம்பு
பற்படகம் கண்டுபாரங்கி இது சமன் இஞ்சி கஷாயம்
செய்து சுரத்தினியும் சுக்கு கொத்தமல்லி அரத்தை
தேசாவரம் வகைக்கு திராக்ஷை 1 உட்படக் குறுந்த
தண்ணீர் விட்டு அரைத்து அரைபடிக்குத் தண்ணீர்
கலந்து அடுப்பில் வைத்துக் கொதிக்க வைக்கவும்
பாதியாக வற்ற அதில் ஒரு வேளைக்கு சீனாக்
சர்க்கரை போட்டுக் குடிக்கவும். இப்படி மூன்று நேரம்
குடிக்க மேக வெட்டை சுரம் மாந்த வெட்டை குளிர்பின்னா
சுரம் தீரும் குளிர் சுர மானால் மாந்த கக்கத்தில் ஒரு
ஆ காசுத்தளவு தேன் விட்டு மூன்று நேரம் குடிக்கவும்
தீரும். மேகவித சுரம் மேகசன்னி சுரம் கபச்
சுரங்களும் விட்டுப் போகும்.

69·அ மேகபயாந்தீய சுரத்து சர்வ சுரத்துக்கு
கசாயம்

சுக்கு, மிளகு, திப்பிலி
ஏலம், பச்சிலை, லவங்கம், சதகுப்பை, அதிமதுரம்,
சந்தனக் கட்டை விலாமிச்சம்வேர், தாமரைக் கொடி
கோட்டம், கோரைக் கிழங்கு, வெள்ளை கொத்தம்
பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம் வேலியணங்கன்

இதுசமன் கொண்டு இடித்து ரெண்டு படி தண்ணீர் விட்டு யெட்டிலொன்று ஆகக் குறுக்கிக் காய்ச்சி வடித்துக் குடுக்கத் தீரும்.

தீரும் வியாதி :

மூர்ச்சை அடிவிக்கலை தாகம் ஆட்டம் சோபம், கைகால் யெளச்சல் கண்ணெரிவு பித்தவெட்டை சுரம் மேகவெட்டை சுரம் பயித்திய சுரம் தீரும் மூன்றுநாள் கெசாயம் குடுக்கவும்

ஆ குமினெண்ணை அபரம்

இந்தாளவேர்ச்சார்படி, பசுவின்பால்படி, சித்தாமணக்கெண்ணைபடி! மொசுமொசுக்கைச் சாறுபடிகி, கையாந்தகரைச் சாறுபடி கி இதுக்குக் கடைச் சரக்கு, சாதிக்காய், பச்சிலை, கோட்டம், மஞ்சிட்டி இருவேலி, நற்க கோலம், சிறுநாகப்பூ, அளக்கட்டை, விலாமிச்சம் தாமரைக்கிழங்கு, கடுரோகணி, அதிமதுரம், சாதித்திர பேதி இது வகைக்கி திராளைடை, நெல்லிக்

70·அ காய், நாவல்க்காய் விராகனெடை உ கோரைக் கிழங்கு விராகனெடை க இதுவெல்லாம் இடித்து செய்து முன் சொன்ன சாறு பால் எண்ணையெல்லாம் விட்டு அடுப்பில் வைத்து வண்டக் கலக்கி மெழுகு பதத்தில் வடித்து அதில் ஒரு விராகனெடை முருகு சட்டம் போட்டு வைத்துக் கொண்டு உடம்பெங்கு ஜனமாட்டு உள்ளுக்கு ஒரு கொண்டியளவு கொள்ளத் தீரும்.

தீரும் வியாதி :

கால்கை யெரிப்பு, மேகசன்னி உடம்புதுடிப்பு, உச்சிதுடிப்பு, உஷ்ணம், நீர்க்

கருப்பு, நீரழிவுக்கு, புளப்புண்ணு, எலும்புருக்கி ரத்தம், மாந்தம் உள்க்கனை வரட்சி காசநோய் தீராவெண்குஷ்டமும், கெர்ப்ப வாய்வு, பெரும்பாடு 40 வகை பயித்தியம், வெள்ளைப்படும் உஷ்ணரோகம் யாதுவெல்லாம் தீரும். மேகம் 21 தீரும்.

7 வயது இளமை முதல் 100 வயது இளமை வரை காணவில்லை

10-அ வாயப்புண்ணு - வயற்றுப்புண்ணு சிரங்குக்கு

சூரணம்.

மாதுளை பலம் !, ஏலம் பலம் !

இது ரெண்டும் பொடித்து வஸ்த்திரப்படமிட்டு இதில் ரெண்டு வராகனெடை அளவுத்திக் கற்பூரம் ... நல்ல சர்க்கரை ஒரு பலம் சேர்த்துக் கொண்டு ... தினசரி கொள்ளவும்.

தீரும் வியாதி :-

உஷ்ணம் வாய்வு வாயப்புண்ணு வயற்றுப்புண் கூடு தீரும். சிரங்குப் பகலான் நெய்யால் கொள்ளவும். இச்சாபத்தியமாகச் சாப்பிடவும்.

ஆ ✓ சிரந்தராப்பான் வண்டுகடிக்கு

மருந்து

பறங்கிப் பட்டை பலம் !

பறங்கி கிழங்கு பலம் 1, வாய்விளங்கம் பலம் 1 அமுக்கரா கிழங்கு பலம் 1 சுக்கு பலம் 1, திப்பிலி வராகனெடை 5 மிளகு வராகனெடை 5

இதுவெல்லாம் ஒன்றா யரைத்து அரைத்துப் புடமிட்டு யதில்
உட்டு மருந்து சிவனார் வேம்பு சூரணம் பலம் கி
ஏவள்ளருக்குச் சூரணம் பலம் 4 சங்கம் வேர்ச் சூரணம்
பலம் இந்த சூரணத்தை முன் செய்த சூரணத்தா
லொன்றாய் உட்புறப் புழுக் கலசத்தில் வைத்துக் கொண்டு
வெருகடிப் பிரமாணம் அருளயிற் கொள்ளவும்
அருளையென்பது சிறுதிருசயென்று சொல்வது இதிலே
தீரும் மண்டலம் கொள்ளத் தீரும் வியாதி: கிரந்தி 16,
பித்தம் 16, கரப்பான் 64 வண்டுகடி 16, வாதங்கள்
கைகால் முடக்கு களைதுகள் சூலையும், வாய்ச் சொறி,
மேகங்கள் கிரந்திகள் சகலவாய்வு வாதம் இப்படி
வியாதிகளெல்லாம் தீரும். பத்தியம் நெய்ப்பால் உட்டவும்
மற்றதெல்லா தவிர்க்கவும். வியாதியிடம் நோக்கி
கொள்ளவும். இது கை கண்டது.

102அ தேத்தான் வடகம்

தேத்தான் விரை நூறு விரை
தண்ணீர்யாழுற வைத்து ஒன்றுநாள் ஊறின பின்னிடுத்து
மேல்புறணதள்ளி விரையைத் தட்டி இளநீர்
30 நாழிகை ஊறவைத்து எடுத்து இதில்ச் சரக்கு
உட்டு விபரம். சாதிக்காய் சாதிப்பத்திரி தாளிசப்
பத்திரி லவங்கம் சிறுநாகப்பூ, கொத்தமல்லி வெட்டி
வேர், விளாமிச்சம் ஏலம் சிறுவங்கு வால்மிளகு
இந்நாறு இது வகை விராகனிடை 1 நெல்லிவற்றல்
இரத்தச் சந்தனம் ஏல்லவ வேறு தேவதாரம்
அவைக்கட்டை இது வகைக்கு விராகனிடை 1 வெம்

ஆ நற்சீரகம் கோட்டம் இது வகைக்கு வராகனிடை 3 குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி இது வகைக்குப் பணவிடை 3 இது வெல்லாம் ஒன்றாய்க் கூட்டி தேத்தான் மாரையுடன் சேர்த்து ஆட்டுக்கல்லால் நன்றாய் ஆட்டி கிளிச்சக்கரை ஒரு பலம் கூட்டி மாத்திரை மாத்திரையாகப் பாகத்து வைத்துக் கொண்டு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் ஒரு நாற்றதும் காயவைத்து பசுவின் வெண்ணெய் போட்டு வெண்ணெய் உருகையுடனே இந்த மருந்து மாத்திரைப் போட்டுச் சிவக்க காய்ச்சி வெந்த பருவத்தில் எடுத்து வைத்துக் கொண்டு ஒரு மாத்திரைப்படி இரண்டு நேரமும் கொள்ளத் தீரும் வியாதி :.

கபாலசூலை, அஸ்தி வெட்டை

அஸ்திசுரம், எலும்புருக்கி வெட்டை, மருமம், மேகமூத்திரம் பயித்தியம் ரத்த மூத்திரம், வெள்ளை சிரத்தம், சித்திரப்பாலம், நீரா குறுக்கு நெய்யும் பெரும்பாடு, நீர்க்கடுப்பு, உஷ்ணம் உடம்பு எரிச்சல் யாது வெல்லாம் தீரும். இதுக்குப் பத்தியம் இச்சாப் பத்தியமாகச் சாப்பிடவும்.

103. அ

சகல வாயுக்குச் சூரணம்

கையாந்தகரைச் சாறுபடி

குப்பைமேனி சாறுபடி, ஜம்பு படி, இந்த இரண்டு சாற்றிலும் ஊற வைத்து உலர்த்திக் கொண்டு முத்தின பிரண்டை சிறுக சிறுக நறுக்கினது ஒரு படி இதை எருமை மோர் விட்டு ஊற வைத்து எடுத்து உலர்த்திக் கொண்டு பச்சைக் காந்தல்

உள்ள ஒருமாத்திரைக் கூட்டி பொடித்து தினம் கூடி அருந்திவரப்
புடமிட்டு வைத்துக் கொண்டு குன்றியளவு அல்லாத்
தின்னவும். சகல வாய்வுகளும் தீரும். பத்தியமில்லை.

ஆ வெட்டைக்குச் சட்டை வயிர்வநாதர் ஜாத்ரை
நெய்.

வெள்ளாரைச்சாறு, பொன்னாங்கண்ணிச்சாறு
பசுவின்நெய், பசுவின்பால் இது நாலு வகையும் ஒரு
படி கூட்டி பருப்பால் வைத்துச் சாறு சுண்டி மெழுகு
பதமான பருவத்தில் சாதிக்காய் விராகனிடை 6
சாதிப்பத்திரி விராகன் 3 கிராம்பு விராகன் 5
ஏலம் விராகன் 5, அதிமதுரம் விராகன் 4 இது
வெல்லாம் ஒன்றாய்ப் பொடித்துக் கொண்ட தூளத்தை
-யும் ஒருபலப் பஞ்சதாரையும் போட்டு இறக்கிவைத்துக்
கொண்டு காலையிலது கொள்ளத் தீரும்.

தீரும் வியாதி :.

நெருப்பமா யிருக்கிறவர்களுக்கும்
உட்டணம், கெர்ப்பச்சூடு, சூதகவாய்வு, குட்சவாய்வு
வயிற்றில் புண்ணுகள் அந்திரவள்ளடங்கும்
தீராப்பெண்களுக்கும் உண்டாகுட்டுத் தீரும்.
பத்தியம் பால், தயிர் துவரை நெய் மோர் உப்பு

/14அ

வெட்டைக்குச் சீரக நெய்

நற்சீரகம் பலம் 2 .... பாலில்
அரைத்து அட்டுக்கல்லிலே அட்டி ஒருபடி பசு
நெய்யில் கலந்து ஒரு படி பாலும் விட்டு அடுப்பில்

வைத்துப் பால்ச் சாறுக் கலக்கம் திரண்டு பெருகு
பதமான பாண்டு வேரை ஒன்றில் ஆத்திக் கொண்டு
ஏலம் வராகன் ௧, சாதிக்காய் வராகன் 2 சாதிப்
பத்திரி வராகன் 2, கிராம்பு வராகன் 2 இது பொடி
செய்து உடப் போட்டுக் கலக்கிச் சர்க்கரை பலம் 2
போட்டுத் துளாவி நெய்யை வைத்துக் கொண்டு இரு
நேரம் கரண்டியளவு கொள்ளவும். நெய்க்கிய
வரைக்கும் சாப்பிடவும். பத்தியம் சரந்தி புளி,
பாகல் புகையிலை, புகை, தவிர்க்கவும்.
உஷ்ணம் அஸ்தி வெட்டை, பெரும்பாடு
பருமல், நீர்க்கடுப்பு வெள்ளை பிரமியம்
சிரத்தம், வயம்புருக்கைகள் தீரும்.

ஆ பேய்ப்பீர்க்குச் சூரணம்

பேய்ப் பீர்க்கையை புளித்த
பழத்து உதத்திரம் புடமிட்டு கெருடன் முட்டையை
உடைத்து இந்தச் சூரணத்திற் பாதி புளித்துப்
பேய்ச் சுரைக் குடுக்கையிலே அடைத்து வைத்துக்
கொண்டு நாள் பட்ட கொண்ட வாசமுள்ள
பெருக்கித் தலையைக் கழைத்து அந்தச் சூரணத்தை
போட்டு கையால் நன்றாய் மத்திப் பரக்கவும்
கரவாயிலும் சூரணத்தைப் போட்டு அமத்திப்
பரக்கவும் உள்ளுக்கு காலை வெள்ளிலேயே கப்பு
உடனே வாசம் தீரும்.

105.அ பேய்ப்பீர்க்கு வாசத்துக்கு மருந்து

பேய்ப்பீர்க்கன் பாலையைக்
கொண்டு வந்து துவைத்து ஒரு படி சாறு பிழிந்து

இருகூறும் வெள்ளைச் சீனியை நனைத்து நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு வேண்டிய நேரம் ஒரு சாண் நீளம் நாலு விராகனெடைச் சீனியைக் கிருத்து சிறுநீரால் நனைத்து உள்ளுக்குக் கொண்டவுடனே சாந்தியாகும். தாகம் தீரும். கைகண்டது சகல எலிகடி தாகமும் சாந்தியாகித் தீரும். மருந்தும் தீரும்.

௯ சிந்தூரமாரை கண்டது.

சிந்திக் கொடி சாரையை

வெள்ளாட்டு மூத்திரத்தில் எட்டுநாள் ஊறவிட்டு நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு சாரை பொடித்துத் தின்னவும். தீரும். தலைவாசல் கொண்டு மயங்கியிருந்தால் சிறுநீரைப் பொடித்த சாரையைக் கலக்கிக் குடிக்க தீரும் விரைக் கடுவாயிடத் தீரும்.

106 வது இலை கிள்ளல்.

107-அ அஞ்சன மருந்து

நேர்வாளக் கொட்டையை

நெல்லுப் பருப்பைச் செம்மறியாட்டின் மூத்திரத்திலே எட்டு நாள் ஊறப்போட்டு நிழலிலே உலர்த்திக் கொண்டு வாடந்தின்ற பெருக்கு மிளகுபோல் தேன் மண்டை கொண்டால் உமிழ்நீரால் அரைத்துக் கண்ணெழுவிக் கடு வாயிலும் இட்டவுடனே மண்டு போன உயிரும் வரும். கைகண்டது.

,2

ஆ ராஜத்துக்குக் குளிகை

கொடுடகளகொடியென்பது கொல்லன்கிழங்கு கோவைக்கிழங்கு இதுசமூலம் கொண்டு வந்து இவரலவேகும் இந்த இரண்டும் வகைக்கு ஒரு பலம் சேர்த்து இருவது எட்டிப்பழம் சிலையிற்ப் பாதிந்து இந்தசாறு விட்டு அரைத்துப் பச்சைப் பயறு பாதி உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை சிறு நீரிலாவது வெந்நீரிலாவது குடுக்கவும். இரவாயென்று தடவக் குணமாகும்.

106·அ சூரணம் ராஜத்துக்கு
அடிக்கப்பன் மாத்திரை.

கெடுடன் கிழங்கென்பது கீழிச்செக்கிழங்கு கொல்லன் கோவைக்கிழங்கு யென்றுபேர் இந்தக் கிழங்கை அப்பாவாளை ஞாயிற்றுக் கிழமை இராணம் இப்படிக் கொத்த நாளைக் கொண்டு வந்து சிறுக நறுக்கி நிழலிலே உலர்த்தி யாமத்து ஒலத்தரப் பட்டு வைத்துக் கொண்டு விசம் தின்ற பயங்கின பேருக்கு இந்த சூரணம் ஒரு சிட்டியளவு சிறுநீரிலாவது வெந்நீரிலாவது வெற்றிலையிலாவது வைத்துக் குடுக்க இப்படி மூன்று நேரம் குடுத்துக் கதவாயிலில் கோழியிறகு வைத்துக் கட்டவும். சகலவாதுங்களும்
7 உடனே தீரும்

ௐ

ஜுரத்துக்கு மந்திரம்

ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் - அய்யும் க்லியும்
சமசரவணபவாய் - சண்முகாய் சிவகுமார
மணியாய் சுவாகா என்று மந்திரம் சொல்ல
குழியறுக்க ஜுரம் நீங்கும்

109அ

அரையாப்புக்குப் பத்துப் போட விபரம்.

காசுக்கட்டி, கடுக்காய்
களிப்பாக்கு திரைக்காய், துத்தம் அபினி, நேர்
விளம், இதுகளை சம்பிச்சன் சாறு விட்டு அரைத்து
பத்துப் போடவும்.

வேப்பம் பாசிலு வெங்காயம்
பொடி சாரப்பண்ணு பனங்கருப்புட்டி அன்னாசி
உளுந்து கோழி முட்டை வெள்ளைக்கரு விட்டு
அரைத்து பத்துப் போட அரையாப்புக்கட்டி குண
மாகும்.

அரையாப்புக்கட்டு மருந்து.

ௐ

கோவைக் கொடி
பருமனைக் கொண்டு வந்து ஒக்கத்தளவு நறுக்கி
நெய்யக் கொட்டி ஒக்கத்தளவு இரு உரைசல்
இட்ட நெருப்பில் காய வைத்து காய்ந்த
ஓட்டின பேரில் குங்கிலியப் பொடியைப் போட்டு

உருகவாட்டு தட்டின கோவைக் கொடியை வைத்து
இதை அந்த வீக்கத்தில் வைத்துக் கட்டவும்
தீச்சையா நாலே கட்டவும். இறுகக் கட்டவும். வீக்கம்
குணம் வந்தும்.

அரையாப்பு கட்டு மருந்து

அரையாப்புத் தடிச்சு வீங்கின
உடனே எருக்கன் காய் இளங்காய் கொண்டு வந்து
நடுப்பிளந்து உள்ளெடுத்துப் போட்டு அதில்க் கடலை
பாயாத நல்ல பெருங்காயம் வைத்து நாலச்
அற்றிக் கட்டி எடுத்து வைத்து மூன்று நேரம் கட்டவும்
எந்த வீக்கமும் குணமாகும்.

110. அ அரையாப்புக்கு மருந்து.

நாதரா வேர் என்பது நத்தச்
சூரிவேர் நாய்வேளைவேர் இந்த ரெண்டும் வெகும்
ஒன்றாயரைத்து புன்னைக்காயளவு அந்த ரெண்டு
காயளவு ஒரு மாறு நல்லெண்ணெய் மூன்று நேரத்துக்கும்
பகுந்து ஒரு பங்கில் ரெண்டு வேளும் ரெண்டு புன்னை
காயளவு மருந்தைக் கலக்கிக் குடிக்கவும். இப்படி 3
நாள் கொள்ளவும். இதற்கு பத்தியமில்லை அரையாப்பு
நாள் கொண்டிருந்தால் இந்த மருந்து குடித்த மறு
நாள், நாலாம் நாள் உடைஞ்சு போகும் அதிலுள்ள
வாது நிறங்கும். ஒரு நாள் முழுதும் வடிந்தபின் மறு

72

மறுநாள் ஆசக்குளம்பு ஆபரம். அரைக்காப்படி
நல்லெண்ணையாவது தேங்காயெண்ணையாவது
ஆ இதுகளில் அத்திப்பட்டை ஆலம்பட்டை இலுப்பை
பட்டை அரசன்பட்டை தான்றிக்காய் நெல்லிக்
காய் கடுக்காய் கருஞ்சீரகம் வேம்படம்பட்டை
ஆக ஒன்பது வகையும் பொடித்து யெண்ணையிற்
போட்டு சிவந்த பதத்தில் இறக்கி யாறுத்து வைத்த
தைலத்தை யெடுத்து அரைக்கு அந்த எண்ணையிலே
கலந்து புண்ணுக்குச் சீலை மாறுத்துப் போடவும்
ஆறிப் போகும். அரையாப்பு உடைந்து உளசித்து
பாரமாகக் கண் இருந்து அதிலே புரையோடி
சீழ்நீர் சிவந்த நிறமாய்ப் பாய்ந்தால் காரம்
போட மருந்து ஆபரம். செங்கீரை தண்டுடைய
வேரைக் கொண்டு வந்து சிறுக நறுக்கிச் சட்டியில்
கருக்க வறுத்துச் சாம்பலாக்கிப் பசுச் சுண்ணாம்பு
111.அ உட்பக் குழைச்சு சேராங்கொட்டை தயில
யாறுக்குத் தயிலத்தையும் உட்பத் திரியாயுட்டி
புண் வாயளவுத் திணிக்கும் இரு காசளவு
அகலமாயத் திண்ண மட்டும். இந்தக் காரத்தியை
வைத்து அதின் மேல் பச்சையரிசி சோறும்
தயிடம் மூன்று நாள் கட்டவும். பின்பு வெதுப்பு
போட்டு முன் சொன்ன எண்ணையை போட ஆறி
வரும். புரை இருந்த அரையாப்புப் புண்ணுக்கு
தண்ணீரில்லாத முத்தின தேங்காய் உடைத்துத்
திருகி யமம் பூவாக எடுத்து காப்பி படித்துக்கு
முத்தம் ஆகும் வாங்கி இதை வறுக்க வெண்ணெ

யாகும். புளியன வேரைத்தோல் ஒரு சேர வறுத்துக்
உட்டு இது வெல்லம் பொடித் தேங்காய்த்துருவல்க்
ஆ கலந்து வெய்யிலிலே வைத்துப் பதறாந்து எண்ணெயால
நல்ல குஞ்சாரய. [illegible]? தண்ணீருடன் உட்டு வைத்துச்
சூரிய புடம் வைத்து எடுத்துக் கொண்டு எண்ணெய்
புரையோடின புண்ணுக்கு ஊற்றப் புண்ணாறும்
சூல் சொன்ன எண்ணெயும் போடவும். இந்த
எண்ணெய் குடலிலே வைத்து ஊத புண்ணாறும். சர்வ
புண்ணும் ஆறிப் போகும்.

19/2/98

[illegible] சரிபார்த்து பக்கங்களை
[illegible] அச்சுக்கு [illegible]

[illegible]
19/2/98
தனி அலுவலர்

பொருள் யடக்கம்	பக்கம்

பொருளடக்கம்	பக்கம்
	17

பொருளடக்கம் | பக்கம்

பொருள் அடக்கம் | பக்கம்

பொருள் அடக்கம்	பக்கம்

பொருளடக்கம்	பக்கம்
	49

பொருளடக்கம்	பக்கம்

பொருள் யடக்கம் — பக்கம்